IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT, UDHAGAMANDALAM) SESSIONS JUDGE OF THE NILGIRIS AT UDHAGAMANDALAM.

| | |
|---|---|
| Sessions | S.C. 54/2017. |
| | Prosecution |
| Deposition of witness for | LW 6, PW 4 |
| Name | வினோத்குமார். |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Mobile No. | |
| Email I.D | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 12th day of November 2025.

12.11.2025.

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**சத்தியமாக சொல்கிறேன்.**

**முதல் விசாரணை:-**

நான் தற்சமயம் சின்ன வாண்டிச்சோலையில் குடியிருந்தும், ஓதனட்டி கிராமத்தில் காளான் கம்பெனி வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவ சமயத்தில் கண்டோன்மண்ட், வெல்லிங்டன், ப்ரட்சில் துணை தலைவராக இருந்தேன். ஆரோக்கிய நாதன் என்பவரது வீடு என்னுடைய வீட்டருகே உள்ளது. 6.01.2017 ஆம் தேதி ஒரு திருட்டு சம்பவம் நடந்தது. அவரது வீட்டில் இருந்து நகைகள், பணம் காணாமல் போனதாக தெரிய வந்தது. 07.1.2017 ஆம் தேதி போலிசார் எங்கள் வீட்டருகே வந்து படம் வரைந்து , விசாரணை செய்தது சம்பந்தமாக கையொப்பம் பெற்றார்கள். பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. என்னுடன் ஜெரால்ட் என்பவரும் கையொப்பம் செய்தார்.

அந்த பார்வை மகஜர் (அதசாஆ 2). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். பின்னர், ஒரு மாதம் கழித்து ஒருநாள் குன்னூர் வெங்கடேஷ் வர லாட்ஜ் அருகில் நான் சென்று கொண்டிருந்த போது உங்கள் ஊரில் நடந்த சம்பவம் சம்பந்தமாக நாங்கள் விசாரித்து கொண்டிருப்பதாக சொன்னார்கள். அங்கு கும்பலாக நின்று கொண்டிருந்தார்கள். நான் சென்று பார்த்தேன். அப்போது, திருடிய நபர் சென்னையில் இருப்பதாகவும், ஒருவர் உடன் இருந்ததாகவும், போலிசார் அவரை விசாரித்து கொண்டிருந்ததர்கள். எதிரி கிஷோர் குமாரை என் முன்பாக போலிசார் விசாரித்தார்கள். இந்த சம்பவத்தில் சென்னையில் இருந்த ஒரு நபர் நகையை திருடியதாகவும், அப்போது எதிரி கிஷோர் உடன் இருந்ததாகவும், சென்னையை சேர்ந்த ஒரு முஸ்லிம் நபர்தான் நகையை திருடியதாகவும் எதிரி கிஷோர்குமார் போலிஸ் விசாரணையில் சொன்னார். கிஷோர் குமார் கொடுத்த தகவலின் அடிப்படையில் போலிசார் நகை இருந்த இடத்தை நோக்கி சென்று நகையை மீட்டனர். அந்த நகையை மீட்ட போது நான் உடன் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து (அதசாஆ 3). கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்தும் என்னுடையதுதான். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் (அதசாஆ 4) ஆகும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் முதலவதாக வைக்கப்பட்டுள்ள சிலுவை கூடிய தங்க செயின், 3 வதாக வைக்கப்பட்டுள்ள காசு மாலை, 4 வதாக வைக்கப்பட்டுள்ள ஆரம், கீழ் வரிசையில் முதலில் வைக்கப்பட்டுள்ள 2 கம்மல், கடைசி வரிசையில் 3 வதாக வைக்கப்பட்டுள்ள இரண்டு மோதிரங்கள் என் முன்பாக கைப்பற்றப்பட்டவை. இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள முதல் எதிரியான கிஷோர் குமார்தான் அன்று போலிசார் விசாரித்த நகைகளை அவர் சொன்னதின் பேரில் கைப்பற்றினர். யார் பொருளை எடுத்து கொடுத்தார் என்று எனக்கு தெரியாது, எடுத்த பொருளைதான் என்னிடம் காட்டினார்கள். போலிசாரும் கிஷோரும் அங்கிருந்தார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் அனுமதி கேட்கப்பட்டு நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

போலிசார் விசாரணையில், குன்னூர் வெங்கடேஷ்வர லாட்ஜ் அருகில் எதிரி கிஷோர் குமார் என்பவரை என் முன்னிலையில் விசாரித்த போது அவர் ஒரு ஒப்புதல்

வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலிசார் என் முன்னிலையில் பதிவு செய்து, என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், பின்னர் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அந்த நபரை வெல்லிங்டன் பாதைமுனிஷ்வரர் கோவில் அருகில் கூட்டி சென்று அவர் எடுத்து ஆஜர் செய்த 2 தங்க வளையல் 16 கிராம் உடையது, நெக்லஸ் 1- 16 கிராம் உடையது, செட்ராப் -2 சுமார் 3.9 கிராம் உடையது, செயின் ஒன்று சுமார் 19.40 கிராம் உடையது, காசுமாலை செயின் ஒன்று சுமார் 8.40 கிராம் எடை உடையது, இன்னொரு செட்ராப் இரண்டு சுமார் 5.70 கிராம் எடை உடையது, காது வளையல் 2 சுமார் 4.10 கி. எடை உடையது, ஸ்டட் இரண்டு 4.20 கி. எடை உடையது, ஜிமிக்கி 2 சுமார் 1.20 எடை உடையது, மோதிரம் இரண்டு சுமார் 4.10 கிராம் எடையுடையது என் முன்னிலையில் எதிரி கிஷோர்குமார் எடுத்து ஆஜர் செய்ய அதை போலிசார் கைப்பற்றினார் என்றால் சரியல்ல. இந்த பொருட்கள் நேரடியாக இல்லாததால் என்னால் சரியாக சொல்ல முடியவில்லை. போட்டோவில் நான் குறிப்பிட்டு சொன்ன பொருட்களை மட்டும் அடையாளம் காட்ட முடியும்.

<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை</u>:-

எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/- வினோத்குமார் ./

Typed down to my dictation, in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/ Thiru. M.Senthilkumar/
Sessions Judge,
Magalir Neethimandram,
(FTMC), Udhagamandalam.